2022 ஏப்ரல் 18]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *2009 ஆம் ஆண்டு விரிவாக்கம் செய்ய நிலங்கள் எடுக்கப்பட்டபோதுகூட, அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சுற்றுப் பயணம் வந்தபொழுது, நாங்கள் சாலையில் நிறுத்தி கேட்டபொழுது, உடனடியாக அந்த விரிவாக்கப் பணியை நிறுத்தினார். கொங்குமண்டலத்திலே தொழிற்பூங்காக்கள் அமைத்தால் சாயப்பட்டறைகள் வராது என்று மக்கள் நம்புகின்ற வகையில் செய்தால் அங்கு எதிர்ப்பு இருக்காது என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனைக்கு நன்றி.*

வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

115—

சமுதாயக் கூடம்

***14171—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், சிறுபனையூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சிறுபனையூர் ஊராட்சியின் மக்கள்தொகை 2,485 ஆகும். சிறுபனையூர் ஊராட்சியிலிருந்து திருவரங்கம் ஊராட்சி 4 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆகவே, திருவரங்கம் ஊராட்சியில் உள்ள சமுதாயக் கூடத்தை சிறுபனையூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சிறுபனையூர் ஊராட்சிக்கென தனி சமுதாயக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் தொகுதி, சிறுபனையூர் தக்காவின் மக்கள்தொகை 2,485 என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து உண்மைதான். ஆனால், என்னுடைய தொகுதி முழுக்க கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியின் மையப் பகுதியான திருவரங்கத்தில் இருப்பது ஒரேயொரு சமுதாயக் கூடம்தான். ஆகவே நூற்றுக்கும் அதிகமான கிராமங்கள் அந்த ஒரே சமுதாயக் கூடத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது. மேலும், அங்கிருந்து நகரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் போதிய போக்குவரத்து வசதி இல்லை. ஆகவே, சிறுபனையூர் தக்காவில் ஒரு சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுத்தால் அங்குள்ள மக்களுக்கு ஏதுவாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய கேள்வி, கிராமப் பகுதிகள் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நிரம்பியதாக இருக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கேற்ப இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிறுபனையூர் கிராமத்திற்கு மட்டுமல்ல, மேலும் பல்வேறு கிராமங்களுக்கும் சமுதாயக் கூடங்கள் தேவை என்றும் வினாக்களை எழுப்பியிருக்கிறார்கள். நேரிலும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர் மட்டுமல்ல, அனைத்து உறுப்பினர்களும் இதே கோரிக்கையை என்னிடம் வைத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணப்படி, கிராமப் பகுதிகளிலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறுகின்ற வகையில் அனைத்து அடிப்படை வசதிகளையும் உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, இனி எதிர்காலத்தில் இவையெல்லாம் முறையாகக் கணக்கிடப்பட்டு, தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இதுபோன்ற சமுதாயக் கூடங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் வேண்டுகோள் வைத்து அவை*

2022 ஏப்ரல் 18]

பரிசீலிக்கப்பட்டு, நிதி ஆதாரங்களுக்கு ஏற்றவாறு பரவலாகச் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதி முழுக்க கிராமங்கள் நிறைந்த பகுதியாகும். சென்ற ஆட்சிக் காலத்திலே வறட்சியின் காரணமாக அனைத்து ஆழ்துளைக் கிணறுகளும் வறண்டு போய்விட்டன. இதே மாமன்றத்தில் அதனை வலியுறுத்தி பலமுறை கோரிக்கை வைத்திருந்தேன். ஆனால், அதற்கு எந்தத் தீர்வும் காணப்படவில்லை. எதுவும் நடைபெறாத காரணத்தினால், நானே எனது சொந்தச் செலவில் 15-க்கும் மேற்பட்ட தண்ணீர் லாரிகளை வைத்து அந்தக் கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்தேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக 50-க்கும் மேற்பட்ட திறந்தவெளிக் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. திறந்தவெளிக் கிணறுகளில் தண்ணீர் நிறைய இருக்கின்றது. ஆனால் அந்தத் தண்ணீரைச் சேமித்து வைத்து மக்களுக்கு வழங்குவதற்கு* OH tank *இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அப்படி வெட்டப்பட்ட கிணறுகளுக்கு* OH tank *அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து கிராமங்களுக்கும் தேவையான குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் வழங்க வேண்டுமென்று ஓர் இலக்கு நிர்ணயித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அந்தப் பணியை நிறைவேற்ற கட்டளையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற இடங்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைக் கொண்டு நிறைவு செய்யப்படுகின்றன.* Jal Jeevan *திட்டத்தின் மூலமாகவும், 15-வது மானிய நிதிக் குழுவின் மூலமாகவும் இப்பொழுது நிதி*

[2022 ஏப்ரல் 18

வரப்பெற்றிருக்கிறது. அவற்றை ஒருங்கிணைத்து வெகு விரைவில் உறுப்பினருடைய தேவை அறிந்து, நிறைவேற்றித் தரப்படும்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் குடிசைகள் மிகுந்த பகுதி; புயல், மழை போன்ற பேரிடர்களால் பெரிதும் பாதிப்படைகிற ஒரு பகுதி. அந்த நேரங்களில் அந்தப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு மையங்களாக இருப்பவை இந்த சமுதாயக் கூடங்கள்தான். எனவே, நாகப்பட்டினத்தில் சமுதாயக் கூடங்கள் கட்டித் தருவதற்கு முன்னுரிமை வழங்கி, அங்குள்ள மக்களுக்கு ஓர் ஆறுதலாக இந்த அரசு செயல்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அரசு ஆறுதலாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, 'ஆளுங்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தோழமைக் கட்சி உறுப்பினர்கள் என பாகுபாடு இல்லாமல், தமிழகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும், குறிப்பாக, வாக்களித்தவர்களையும், வாக்களிக்காதவர்களையும், வாக்களிக்காதவர்கள், நாம் வாக்களிக்காமல் தவறிவிட்டோமே என்று இனி எதிர்காலத்தில் எண்ணக்கூடிய வகையில் என்னுடைய செயல்பாடுகள் இருக்கும்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சூளுரைத்து, பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

நாகப்பட்டினத்தைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதி கடலோரப் பகுதி. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு சமுதாயக் கூடத்தின் தேவை அவசியம்தான். அதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். சமுதாயக் கூடங்களின் தேவை அதிகமாக இருக்கிறது. அதற்கேற்ப நிதித்

2022 ஏப்ரல் 18]

தேவையும் அதிகமாக இருக்கிறது. எனவே, பகுதிவாரியாக உரிய கணக்கீடுகள் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எல்லா பகுதிகளுக்கும் விரிவாக அந்தத் திட்டம் போய்ச் சேருகின்ற வகையில் நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஒருவேளை அவசியம், அவசரம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதினால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாயைக் கொண்டு நிறைவேற்றலாம். ஏறத்தாழ 705 கோடி ரூபாய் இந்தத் துறையின் சார்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அவசரத் தேவையிருப்பின், அதைக் கொண்டும் நிறைவேற்றலாம்; பின்னர் பகுதிவாரியாக அனைவருக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்ட மன்றத் தொகுதி, கூட்டுடன்காடு ஊராட்சி, இந்திரா நகர் பகுதியில் சுமார் 5,000 மக்கள் வசித்து வருகின்றனர். அங்கு அரசு நிலமும் உள்ளது. சுப நிகழ்ச்சிகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாக, அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, இந்திரா நகர் பகுதியில் சமுதாய நலக் கூடம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறிய பதில், இந்த வினாவிற்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தவகையில், இடமும் இருக்கலாம். நிதியும் இப்பொழுது வந்துகொண்டு இருக்கிறது. உங்களுடைய சுய நிதியும் இருக்கிறது. அவசியம் கருதி அதைப் பயன்படுத்தலாம். உங்களுடைய நிதியையோ, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியையோ அல்லது வரக்கூடிய அரசு நிதிகளையோ, பிரித்து வழங்குகின்ற காலகட்டத்தில் தேவைக்கேற்ப அவை வழங்கப்படும்.*

[2022 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

116—

ஆரம்ப சுகாதார நிலையம்

***6872—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், பொங்குபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பொங்குபாளையம் கிராமத்தில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமின்றி, பொங்குபாளையம் கிராமத்திலிருந்து சரியாக 5 கி.மீ. இடைவெளியில் பெருமாநல்லூர் என்கின்ற பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் வரைமுறைக்கேற்ப இரு சுகாதார மையங்களுக்கிடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கி.மீ.-க்குமேல் இருத்தல் வேண்டும். ஆனால், அங்கு 5 கி.மீ. தூரத்திற்குள்ளாகவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பொழுது பொங்குபாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.